1982 பிப்ரவரி 12]

சென்னையிலுள்ள வீட்டுவசதி வாரியத்தின் குடியிருப்புகளுக்கான வாடகை.

*வினா எண். 176 —திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலுள்ள வீட்டுவசதி வாரியத்தின் குடியிருப்பு மனை வாடகை 1-2-1981 முதல் 20% அதிகப்படுத்தப் பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) வீட்டுவசதி வாரியம் அதனுடைய 27-12-80 நாளிட்ட தீர்மான எண். 481-ல் வீட்டுவசதி வாரிய குடியிருப்புகளுக்கு வாடகையை 1-2-81 முதல் 20 சதவீதம் உயர்த்துவதென முடிவெடுத்தது. ஆனால், வீட்டுவசதி வாரியம் 20% உயர்த்திய வாடகையை அரசு மறுஆணை வழங்கும் வரை வசூலிக்கக்கூடாது என ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. எஸ். இராசாராமன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, லண்டனிலே காலியாக இருக்கும் இடத்தை அரசே கையகப்படுத்தி, அங்கே வீடுகள் கட்டிக்கொடுப்பதைப்போல், சென்னை நகரத்தில் இருக்கும் காலிஇடங்களையும் அரசு கையகப் படுத்தி வீடுகள் கட்டிக்கொடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கேள்வி வாடகையை உயர்த்தியது பற்றியது. அதைத் தொடர்ந்து கேள்வி கேட்டால் பதில் சொல்ல வசதியாக இருக்கும்.

தஞ்சையிலுள்ள E.S.I. மருத்துவமனை

*வினா எண்.177—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூரில் S.I. மருத்துவமனைக்கு சொந்த கட்டிடம் மற்றும் அலுவலர் குடியிருப்பு கட்ட செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : ஆம்.

தொழிலாளர்களிடம் பிடிக்கப்படும் வைப்புநிதித்தொகை.

*வினா எண். 178— திரு. ஏ. டி. கருப்பையா : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிலாளர்களிடம் பிடிக்கப்படும் வைப்புநிதித் தொகை அவர்கள் வேலையிலிருந்து சென்ற பின்னர் ஆண்டுக் கணக்கில் அவர்களுக்குக் கொடுக்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அந்தத் தொகையை உடனடியாக வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) வேலையிலிருந்து விலகும் அல்லது ஓய்வுபெறும் தொழிலாளர் வைப்பு நிதி பெறுவதற்கான மனுவை முழுமையாக பூர்த்தி செய்து அனுப்புதல் வேண்டும். தொழிலதிபர் செலுத்த வேண்டிய வைப்புநிதித் தொகையைச் செலுத்தி மனுவுடன் தேவையான எல்லா ஆவணங்களையும் வைத்து அம்மனுவை தொழிலதிபர் வட்டார வருங்கால வைப்பு நிதி ஆணையர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். அம்மனுவைப் பெற்ற 15 நாட்களுக்குள் உறுப்பினரின் சேமநல நிதி கணக்கை முடித்து தொகை அனுப்பி வைக்கப்படும். உறுப்பினர் தெரிவித்துள்ளவாறு எந்த மனுவும் ஆண்டுக்கணக்கில் கிடப்பில் வைக்கப்பட்டிருக்கவில்லையென்று வட்டார வருங்கால வைப்பு நிதி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

(ஆ) வைப்பு நிதித் தொகையைத் திருப்பிக் கொடுப்பதில் காலதாமதம் ஏற்படுவதாக குறிப்பான புகார்கள் அரசின் கவனத்திற்கு வந்தால் அவற்றின் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஏ. டி. கருப்பையா : துணைத்தலைவரவர்களே, வருங்கால வைப்பு நிதி சம்பந்தமாக தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்ட பின்னால் அல்லது தொழிலாளர்கள் இறந்துவிட்டால் கூட பல ஆண்டுகளாகியும் கொடுக்கப்படுவதில்லை என்ற குறைபாடு இருக்கிறது. இறந்துவிட்ட தொழிலாளி குடும்பத்திற்கு கொடுப்பதில்கூட தாமதம் பல ஆண்டுகாலம் ஏற்படுகிறது. எல்லாவிதமான சான்றிதழும் கொடுக்கப்பட்ட பின்னால் உடனடியாக கொடுக்கப்படும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள்; நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் எவ்வளவு நாளைக்குள் கொடுக்கப்படும் என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : துணைத் தலைவர் அவர்களே, 15 நாட்களுக்குள் கொடுக்கப்படும் என்று சொன்னேன். என்னிடம் இருக்கும் தகவல்படி தமிழகத்தைப் பொறுத்தவரையில் வைப்பு நிதித்தொகையைப் பெற கோரிவந்த எந்த மனுவும் ஆண்டுக்கணக்கில் கிடப்பில் வைக்கப்பட்டு இருக்கவில்லை.

திரு. என். வரதராஜன் : துணைத் தலைவரவர்களே அமைச்சரவர்கள் இந்த வைப்புநிதி விரைவிலே கொடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். அது நல்லது. ஆனால் நான் அறிந்த வரையில் பல மாதங்கள் வரையில் வேலையிலிருந்து ஓய்வு பெறுகிற தொழிலாளிக்கு வைப்புநிதி வழங்கப்படாமல் சிரமப்படுகிறான். ஆகவே வேலையிலிருந்து நீங்கி 3 மாதங்களுக்குள் வைப்புநிதியை கொடுப்பதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

1982 பிப்ரவரி 12]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: துணைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொன்னேன். அந்த அலுவலகத்திற்கு வந்தபின்னால் 15 நாட்களுக்குள் கொடுக்கப் பட்டுவிடுகிறது என்ற விவரம் இருக்கிறது. ஆகவே ஆண்டுக் கணக்கில் எந்த மனுவும் கிடப்பில் இல்லை என்று பதில் வந்திருக்கிறது.

தமிழ்நாட்டிலுள்ள 'பண்டாரத்தார்' சமூகத்தினர்.

*வினா எண். 179—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழ்நாட்டில் 'பண்டாரத்தார்' சமூக மக்களிடமிருந்து அவர்களைத் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) ஆம்.

(ஆ) தாழ்த்தப்பட்ட இனத்தோருக்குரிய அடிப்படை பண்பியல்புகள் 'பண்டாரத்தார்' என்னும் இனத்தவரிடையே இல்லை. இவ்வினத்தவருக்கு தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கபபடுவதற்குரிய தகுதிகளில்லை. எனவே இதன் மீது மேல் நடவடிக்கை தேவையில்லை என முடிவு எடுக்கப்பட்டது.

திரு. எம். சின்னசாமி: துணைத் தலைவரவர்களே, பண்டாரத்தாரர் சமூகத்தினர் பெரும்பாலும் கோவில்களில் பூஜை செய்தல், பூ வியாபாரம் செய்தல் போன்ற பணிகளைச் செய்தல், சொற்ப வருமானத்தில் வாழ்கிறார்கள். அவர்களுடைய பொருளாதாரத்தைப் பொறுத்தவரையில் அவர்கள் ஆதிதிராவிடர் போல இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் குழந்தைகள் பள்ளிக்குச் படிக்க வாய்ப்பு இல்லை. பொருளாதார நிலையில் மிகவும் பின் தங்கிய நிலையில் இருப்பதால அவர்களை ஆதிதிராவிடர் பட்டியலில் சேர்ப்பதற்கு மாநில அரசு, மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யுமாஎன்று அறியவிரும்புகிறேன்.

(முற்பகல் 10.10)

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாநில அரசினைப் பொறுத்தவரையில் ஒரு இனத்தை பழங்குடியினர் பட்டியலிலோ அல்லது தாழ்த்தப் பட்டவர்கள் பட்டியலிலோ சேர்ப்பதற்கு மத்திய அரசிற்கு பரிந்துரை செய்வதற்கு சில நடைமுறை விதிகள் உள்ளன. தாழ்த்தப்பட்டவர் பட்டியலில் அவர்களைச் சேர்க்கின்ற விதி முறைகளிலே கொடுக்கப்பட்ட பழக்கவழக்கங்கள் அவர்களிடம் இல்லாத காரணத்தால் தாழ்த்தப்பட்டவர்களுக்குரிய அடிப்படைப் பண்புகளை அவர்கள் பெற்றிராத காரணத்தால் அவர்களைச் சேர்க்க இயலவில்லை.